டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 8.11.2025 சனிக்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 115 - Madurai | Online Edition

# விவசாய ஆராய்ச்சி மற்றும் கல்வித் துறையும் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழுமமும் ’சிறப்பு இயக்கம் 5.0’-ஐ வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளன

புது தில்லி, நவ.7

விவசாய ஆராய்ச்சி மற்றும் கல்வித் துறையும் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழுமமும் நிலுவையில் உள்ள விவகாரங்களைத் தீர்ப்பதற்கான ’சிறப்பு இயக்கம் 5.0’-ஐ வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளன. இந்த இயக்கத்தின் மூலம், தூய்மை, ஆவண மேலாண்மை மற்றும் பொதுச் சேவை வழங்குதல் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்கச் சாதனைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்தச் செயல்பாட்டின் முக்கிய விளைவாக, பழைய பொருட்களின் விற்பனை மற்றும் ஏலம் மூலம்ரூ.2.45 கோடிக்கு மேல் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழும நிறுவனங்கள், மண்டல நிலையங்கள் மற்றும் விவசாய அறிவியல் மையங்கள் முழுவதும், நிர்ணயிக்கப்பட்ட 8,050 இலக்குக்கு எதிராக 8,016 தூய்மை இயக்கங்கள் நடத்தப்பட்டன. இதன் காரணமாக, உபயோகமற்ற பொருட்களை முறையாக அப்புறப்படுத்தியதன் மூலம் 2,35,591 சதுர அடி இடம் விடுவிக்கப்பட்டுள்ளது.

ஆவண மேலாண்மைப் பிரிவில், 26,000 காகிதக் கோப்புகள் ஆய்வு செய்யப்பட்டன. அவற்றில் 25,591 அடையாளம் காணப்பட்டு, 10,815 கோப்புகள் வெற்றிகரமாக அப்புறப்படுத்தப் பட்டன. மேலும், 15,125 மின்-கோப்புகள் ஆய்வு செய்யப்பட்டு, 4,254 மூடப்பட்டன. பொதுச் சேவை வழங்குதலில், நிலுவையில் இருந்த 63 பொதுக் குறைகளில் 59 தீர்க்கப் பட்டன, அத்துடன் அனைத்து பாராளுமன்ற உறுதிமொழிகள், மாநில அரசு குறிப்புகள் மற்றும் பொதுக்குறை முறையீடுகள் அனைத்தும் முழுமையாகத் தீர்த்து வைக்கப்பட்டு, பொறுப்புடைமை உறுதி செய்யப்பட்டது.

# புதிய ரக வெள்ளை எள் ஆய்வு



ஈரோடு, நவ.7

ஈரோடு மாவட்டம், பவானி வட்டாரம், புன்னம் கிராமத்தில் உள்ள பெரியசாமி என்ற விவசாயி விஆர்ஜ 5 என்ற வெள்ளை எள் ரகத்தினை ஆதார நிலை இரண்டாம் விதைப்பண்ணை அமைத்துள்ளார். இப்பண்ணையினை ஈரோடு மாவட்ட விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு உதவி இயக்குனர் முனைவர் மா.சத்தியராஜ் ஆய்வு செய்து விதை சான்று அலுவலர்களுக்கு பயிற்சி அளித்தார்.

இந்த விஆர்ஜ 5 வெள்ளை எள் விருத்தாச்சலம் ஆராய்ச்சி நிலையத்தில் 2023ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இதன் வயது 75 முதல் 85 நாட்களாகும். இறவை மற்றும் மானாவாரிக்கு உகந்த ரகம் ஆகும். இறவைக்கு 700 முதல் 800 கிலோ வரைக்கும் மகசூல் கிடைக்கும். ஒரு கனு இடைவெளியில் இரண்டு முதல் மூன்று காய்கள் வரை காய்க்கும் இயல்பு பெற்றது. இந்த இரகத்திற்கு பக்க கிளைகள் கிடையாது. அடர் நடவுக்கு ஏற்ற ரகம் ஆகும். மேலும் இந்த ரகம் சாறு உறிஞ்சும் பூச்சிகளுக்கு எதிர்ப்பு திறன் கொண்டது.

மாநில விதை பண்ணை பவானியில் உள்ள வயலில் நடவு செய்யப்பட்டுள்ள நெல் இரகங்கள் ஏ எஸ் டி 21 மற்றும் டி பி எஸ் 5 விதைப்பண்ணையினை ஆய்வு மேற்கொண்டு மேற்படி ரகங்களின் மகசூல் திறன், குணாதிசயங்கள், வயல் ஆய்வு மேற்கொள்ளும் நடைமுறைகள், களவன்கள் கண்டறியும் முறைகள்த அவற்றை அகற்றும் முறைகள் குறித்து விதைச் சான்று அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

பயிற்சியின் போது விதை சான்று அலுவலர் தொழில்நுட்பம் மு.நாசர்அலி, ஈரோடு விதை சான்று அலுவலர்கள் மற்றும் உதவி விதை அலுவலர்கள், பண்ணை மேலாளர் ஆகியோர் உடன் இருந்தனர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# நிலவாரப்பட்டி கிராம வேளாண் முன்னேற்றக் குழுவிற்கு ராபி பருவம் பயிற்சி!



சேலம், நவ.7

சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி வட்டாரம், வேளாண்மைத் துறை மூலம் செயல்படும் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ATMA) திட்டத்தின் கீழ் ராபி பருவத்திற்கான பயிர் சாகுபடி பயிற்சி நடைபெற்றது.

பயிற்சியில் சாகுல் அமீத், வேளாண்மை உதவி இயக்குநர், பனமரத்துப்பட்டி, கலந்து கொண்டு வேளாண்மைத் துறை திட்டங்கள் மற்றும் மானியங்கள் குறித்தும், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் பற்றியும் மற்றும் ராபி பருவம் சாகுபடி தொழில்நுட்பங்கள் பற்றி விளக்கம் அளித்தார். பயிற்சியில் நந்தகுமார், உதவி வேளாண்மை அலுவலர், கலந்து கொண்டு ஆடா தொடா, நொச்சி, வேப்பங் கன்று ஆகியவற்றின் முக்கியத்துவம் மற்றும் பயன்கள் பற்றி விளக்கம் அளித்தார். சுமித்ரா, வட்டார தொழில்நுட்ப மேலாளர் கலந்து கொண்டு கிராம வேளாண் முன்னேற்ற குழுவின் நோக்கம் மற்றும் முக்கியத்துவம் பற்றி எடுத்துக் கூறினார். மேலும் பயிற்சியில் செந்தில்குமார், தோட்டக்கலை உதவி அலுவலர், கலந்து கொண்டு தோட்டக் கலை துறை மூலம் செயல்படும் திட்டங்கள் மானியங்கள் குறித்து விளக்கம் அளித்தார். இறுதியில் உதவி தொழில்நுட்ப மேலாளர் ரேணுகா, நன்றியுரை கூறினார்.

பயிற்சியில் கலந்து கொண்ட அனைத்து விவசாயிகளுக்கும் நொச்சி, ஆடாதொடா, வேப்பங்கன்று மற்றும் பழச்செடி தொகுப்பு, காய்கரி விதை தொகுப்பு ஆகியவை விவசாயி களுக்கு வழங்கப்பட்டது. பயிற்சியில் 40க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

# Microsoft Excel (அடிப்படை முதல் மேம்பட்டநிலை மற்றும் AI ஒருங்கிணைப்பு) பயிற்சி



கோயம்புத்தூர், நவ.7

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், அக்டோபர் 25, 26 மற்றும் நவம்பர் 01, 2025 ஆகிய தேதிகளில் Microsoft Excel (அடிப்படை முதல் மேம்பட்ட நிலை மற்றும் AI ஒருங்கிணைப்பு) குறித்த 3 நாள் பயிற்சியை ஏற்பாடு செய்துள்ளனர். இந்த பயிற்சி, பங்கேற்பாளர்களின் Microsoft Excel திறன்களை மேம்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டது, குறிப்பாக தரவு பகுப்பாய்வு மற்றும் சிக்கல்கள் தீர்க்க AI கருவி களை பயன்படுத்தி மேம்பட்ட அம்சங் களை கற்றுக் கொடுக்கின்றது. Excel உடன் AI-ஐ ஒருங்கிணைப்பு. Excel இன் அடிப்படை செயல்பாடுகளிலிருந்து முன்னேற்றப்பட்ட தொழில் நுட்பங்கள் மற்றும் AI ஒருங்கிணைப்பு போன்றவற்றுக்கு ஆழமான கற்றலைக் வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டு உள்ளது. இது தரவு மேலாண்மை, பகுப்பாய்வை மற்றும் திறம்பட மேற்கொள்வதற்கு உதவுகிறது. பங்கேற்பாளர்கள் Excel மற்றும் அதன் கருவிகளை எவ்வாறு திறம்பட பயன்படுத்தி பணி செயல் பாடுகளை எளிதாக்கி தரவிலிருந்து செயல்திறன் அதிகரிக்கும் சுட்டிகளை உருவாக்குவதை கற்றுக் கொண்டனர். வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் முதன்மையர் முனைவர் அ.ரவிராஜ், பயிற்சியைத் தொடங்கி வைத்து, பொறியாளர்களுக்கு முடிவெடுத்தல், திட்டமிடல் மற்றும் செயல் படுத்தலில் Excel'ன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

இயற்பியல் அறிவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறையின் பேராசிரியரும் தலைவருமான முனைவர் பாலாஜி கண்ணன் விரிவுரைகள் மற்றும் நடைமுறை அமர்வுகளுக்கு தலைமை தாங்கினார்.

Excel அடிப்படை செயல்பாடுகள், மேம்பட்ட சூத்திரங்கள், நிபந் தனை வடிவமைப்பு, power query மற்றும் pivot அட்டவணைகள் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளை உள்ளடக்கிய அமர்வுகள் முழுவதும் பங்கேற்பாளர்களை அவர் வழி நடத்தினார்.

# களர்நில நெல் சாகுபடியில் செய்ய வேண்டியவை

சேலம், நவ.7

சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டார விவசாயிகளுக்கு வேளாண் உதவி இயக்குனர் ஷரின், களர்நிலத்தில் நெல் சாகுபடியில் செய்ய வேண்டியவைகளை பின்வருமாறு கூறியுள்ளார்.

பாரம்பரிய நெல் விவசாயத்தில் அதிகப்படியாக தண்ணீர் உபயோகப்படுத்துவதாலும் மண்ணில் நீர் தேங்கும் தன்மை நெல் பயிருக்கு அனுகூலமாய் இருப்பதாலும் தன்னுடைய தண்டு மூலம் வேர்களுக்கு காற்றில் உள்ள ஆக்சிஜனை கொண்டு செல்லக் கூடிய தன்மையை நெல் பயிர் பெற்றிருப் பதன் காரணமாகவும் களர்நில விவசாயத்தில் நெல் சாகுபடி சிறந்ததாக அமைகிறது.

கலர் நிலத்தில் அடிப்படையாக செய்ய வேண்டிய சீர்திருத்த பராமரிப்பு முறைகள் நெல் பயிரிடப்பட வேண்டிய களர் நிலப் பகுதியை நன்முறையில் பார்வையிட்டு ஒரு இடத்தில் மூன்றடி ஆழத்திற்கு குழி வெட்டி மேல்மண் இருக்கும் அடிமண் இருக்கும் யாதேனும் அமைந்துள்ளதா என்பதை கண்காணிக்க வேண்டும். இரண்டாவது மூன்று இடங்களில் மண் மாதிரிகள் சேகரிக்கப் பட்டு மண் பரிசோதனை மூலம் அதன் கார அமில நிலை மின்கடுத்தும் திறன் மாற்று சூட்டிய சதவீதம் ஜிப்சத்தின் தேவை ஆகியவற்றை தெரிந்து கொள்ள வேண்டும் சமநிலை கோடு மற்றும் நிலத்தின் சரிவு ஆகியவற்றின் அடிப்படையில் பார்கள் மற்றும் வடிகால்கள் அமைத்து பார்களுக்கு உயரமான வரப்புகள் அமைக்க வேண்டும். ஒவ்வொரு பாத்தியும் நன்முறையில் சமம் செய்ய ஆழமாக உழுது அடி மண் இருக்கம் இருப்பின் உளி கலப்பையால் வெட்டி விட வேண்டும். தண்ணீரை சிறிதளவு நிற்கும் வரை வடித்து விட்டு தலை உரங்களில் ஏதேனும் ஒன்றினை வேப்ப இலை ஐந்து டன் என்று அளவில் இட்டு மூன்று அல்லது நான்கு நாட்கள் மக்க வைத்தல் வேண்டும். மாற்று சரியாக பிடிக்காத இடங்களில் மேலும் சிறிதளவு ஜிப்சம் விடப்பட வேண்டும் கலரை தாங்கக்கூடிய கோ -43 திருச்சி ரகங்கள் போன்ற நெல் நாற்றுகளை ஒரு குத்துக்கு மூன்று அல்லது நான்கு நாட்கள் விதம் மேலாக நடுவது மிக முக்கியம் இவ்வாறு களர் நிலத்தில் நெல் சாகுபடி பற்றி குறிப்பிட்டுள்ளார்.

# அட்மா திட்டத்தில் பண்ணைப்பள்ளி பயிற்சி வகுப்பு

அரியலூர், நவ.7

அரியலூர் மாவட்டம், தா.பழூர் வட்டாரம், வேளாண்மைத் துறையின் கீழ் செயல்பட்டுவரும் அட்மா திட்டத்தில் விவசாயிகளுக்கு கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வரும் கோடாலி கருப்பூர் கிராமத்தில் நன்னெறி வேளாண் முறைகள் குறித்த தலைப்பில் பண்ணைப்பள்ளி பயிற்சி வகுப்பு நடைபெற்றது. கிரீடு வேளாண் அறிவியல் மையத்தின் தொழில்நுட்ப வல்லுநர் திருமலைவாசன், தலைமையேற்று பேசுகையில் நன்னெறி வேளாண் முறைகள் என்பது விவசாயத்தில் செலவுகளை குறைத்து, விளைச்சலை அதிகரிக்கவும், சுற்றுச்சூழல் பாதிப்பை குறைக்க உதவும் முறையாகும். இதில் நிலத்தினை தேர்வு செய்தல், பாசன மேலாண்மை, பூச்சிக்கொல்லிகளின் சரியான பயன்பாடு, பண்ணை பராமரிப்பு மற்றும் தொழிலாளர் பாதுகாப்பு ஆகியவற்றை உள்ளடக்கியது என விரிவாக எடுத்துக் கூறினார். மேலும் ரசாயன உரங்கள் பயன்பாட்டினை குறைப்பது குறித்தும், உயிர் உரங்களை தொழுஉரத்துடன் கலந்து வைத்து நுண்ணுயிர்களைப் பெருக்கி வயலில் இடுவதன் மூலம் ரசாயன உரபயன்பாட்டினை குறைக்கலாம் எனவும் விளக்கினார். தக்கைபூண்டின் பயன்பாடு, ஒருங்கிணைந்த முறையில் உர மேலாண்மையை பின்பற்றி வளமான மண்வளத்தை இழந்துவிடாமல், எதிர்கால சந்ததியினருக்கும் நாம் மாசில்லா சுற்றுசூழலை தருவதற்கு நாம் அனைவரும் இயற்கை வேளாண்மையை பின்பற்றுவோம் எனக் கூறினார். மேலும், கோடை உழவு செய்தல், மண் பரிசோதனை செய்து உரமிடுதல், மேலும் நுண்ணூட்ட உரங்களின் முக்கியத்துவம், பசுந்தாள் உரப்பயிர்கள் மற்றும் உயிர் உரங்களை பயன்படுத்தும் போது 25 சதவீதம் இரசாயன உர பயன்பாட்டை குறைக்கலாம் என்று விரிவாக விளக்கி கூறினார்.

முன்னதாக அட்மா திட்ட வட்டார தொழில் நுட்ப மேலாளர் சகாதேவன் வரவேற்று பேசுகையில் அட்மா திட்டங்கள் குறித்து எடுத்துக்கூறினார். இப்பயிற்சியில் உதவி தொழில்நுட்ப மேலாளர் உஷா, லெட்சுமி மற்றும் கோடாலிகருப்பூர் கிராமத்தை சேர்ந்த விவசாய பெருமக்கள் 25க்கும் மேற்பட்டோர் கலந்துக் கொண்டனர்.

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**—தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

**Office**
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# நுண்ணீர் பாசன அமைப்பின் தானியங்கி நீர்பாசனம் இயக்கம் மற்றும் பராமரிப்பு குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி

மதுரை, நவ.7

மதுரை மாவட்டம், தே.கல்லுப்பட்டி வட்டாரம் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டம் 2025-26ம் ஆண்டு நிதியில் வே.வெங்கடாசலபுரம் கிராமத்தில் நுண்ணீர் பாசன அமைப்பின் தானியங்கி நீர்பாசனம் இயக்கம் மற்றும் பராமரிப்பு குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி 7.11.25 அன்று நடைபெற்றது. வட்டார தொழில்நுட்ப மேலாளர் ம.ஹேமலதா வரவேற்புரை ஆற்றினார்.

வேளாண்மை துணை இயக்குநர் அ.இராணி, வேளாண்மைத் துறையில் செயல்படுத்தப்படும் மத்திய திட்டங்களான உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு இயக்கம், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம், தேசிய எண்ணெய்வித்துக்கள் பாதுகாப்பு இயக்கம், நுண்ணீர் பாசன திட்டம், பாரம்பரிய வேளாண் வளர்ச்சித் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த பண்ணையம் திட்டங்கள் குறித்தும் விவசாயிகள் திட்டங்களில் பயன் பெறுமாறும் கூறினார். மா.விமலா, ஒருங்கிணைப்பாளர் / வேளாண்மை உதவி இயக்குநர், வேளாண்மைத் துறையில் சிறுகுறு விவசாயிகளுக்கு நுண்ணீர் பாசன திட்டத்தில் இலவச மாகவும், பெரிய விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்திலும் கறுப்பு பைப்புகள் மற்றும் சொட்டுநீர் பாசனம் வழங்கப்படுகிறது என்றும் விவசாயிகள் தேவையான ஆவணங்களை சமர்ப்பித்து பயான்பெறலாம் என்று கூறினார். மேலும் நிலம் வைத்துள்ள அனைத்து விவசாயிகளும் விவசாய அடையாள எண் பதிவு செய்வது குறித்து கூறினார்.

துணை வேளாண்மை அலுவலர் கோ.சீனிவாசன், கலைஞரின் திட்டம் குறித்தும் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் இடுபொருட்களை விவசாயிகள் வாங்கி பயன்பெறுமாறும், நுண்ணூட்ட உரக்கலவையின் பயன்கள் மற்றும் உபயோகம் மற்றும் பயிர்க்காப்பீடு செய்வதன் அவசியம் குறித்தும் மற்றும் வேளாண்மைத் துறையின் மானிய திட்டங்கள் பற்றியும் எடுத்துக் கூறினார்.

கேப்டன் நிறுவனத்தின் அலுவலர் சுப்புராம், விவசாயிகளுக்கு மழைத்தூவான், தெளிப்பு நீர் பாசனத்தினை இயக்கும் எளிய முறைகள் குறித்தும் சொட்டுநீர் பாசனம் செய்யும் விவசாயிகளுக்கு இப்பாசனத்தின் மூலம் பயிர்களுக்கு உரமிடுதல் குறித்தும், இணை குழாய்களை பராமரிக்கும் முறைகள் குறித்தும் கூறினார்.

விதை நேர்த்தி செய்வதன் அவசியம் மற்றும் உயிர் உரங்களின் பயன்பாடு குறித்தும் வேளாண்மைத்துறையில் செயல்படுத்தப்படும் மானியத்திட்டங்கள் குறித்தும் உதவி வேளாண்மை அலுவலர் சு.மகேஸ்வரி கூறினார்.

உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பா.மாரிமுத்து, கா.ஜெகன் பாண்டி, இப்பயிற்சிக்கு ஏற்பாடு செய்திருந்தனர். இப்பயிற்சியில் 40 விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

# மண்புழு உரத் தயாரிப்பு குறித்த 26 நாட்கள் பயிற்சி

விருதுநகர், நவ.7

விருதுநகர் மாவட்டம், அருப்புகோட்டை அருகில் உள்ள கோவிலாங்குளம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் நிதியுதவியுடன் மண்புழு உரத்தயாரிப்பு குறித்த 26 நாட்கள் பயிற்சி நடைபெற்றக் கொண்டிருக்கிறது. இந்த பயிற்சியில் 35 வயதிற்கு கீழ் உள்ள மாணவர்கள், மாணவிகள் ஆக மொத்தம் 25 பேர் பயிற்சி பெற்று கொண்டு இருக்கிறார்கள்.

இந்த பயிற்சியை வேளாண்மை அறிவியல் நிலையத்தின் தலைவர் முனைவர் செல்விரமேஷ், தொடக்கி வைத்து நடத்தி கொண்டிருக்கிறார்கள். இந்த பயிற்சியின் பயிற்றுநர் ஆக, முனைவர் கண்ணன், செயலாற்றுகிறார். இந்தப் பயிற்சியானது, அக்டோபர் 10ம் தேதி தொடங்கி, நவம்பர் 12ம் தேதியோடு முடிவடைய உள்ளது. இத்தகைய 26 நாட்கள் குறித்த அடுத்த பயிற்சியானது தமிழக அரசால் விரைவில் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கபடுகிறது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# இப்கோ நானோ டி.ஏ.பி விழிப்புணர்வு கருத்தரங்கம்



நாகப்பட்டினம், நவ.7

நாகப்பட்டினம் மாவட்டம், வெங்கிடாங்கள் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கத்தின் கீழ் செயல்படும் ஒக்கூர் கிராமத்தில் நானோ உர விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது. இக்கருத்தரங்கத்தில் இப்கோ கள அதிகாரி, நானோ யூரியா, நானோ டி.ஏ.பி, நானோ ஜிங்க், நானோ காப்பர், சாகரிகா மற்றும் இதர இப்கோ உரங்களின் பயன்பாடு மற்றும் நன்மைகள் குறித்து விவரமாக விளக்கினார்.

அவர் தொடர்ந்து, நானோ டி.ஏ.பி மூலம் விதை, நாற்று, கரணை நேர்த்தி முறைகள் பற்றியும் விவரித்தார்.ஒரு கிலோ விதைக்கு 5 மில்லி நானோ டி.ஏ.பி தேவையான அளவு நீரில் கலந்து, விதையின் மேற்பரப்பில் மெல்லிய படலம் போல் உருவாகச் செய்து 25-30 நிமிடங்கள் நிழலில் உலர்த்தி விதைப்பு செய்ய வேண்டும் என்றும் வேர், கிழங்கு அல்லது கரணை நேர்த்திக்காக, ஒரு லிட்டர் நீருக்கு 5 மில்லி நானோ டி.ஏ.பி. கலந்து 20-30 நிமிடங்கள் ஊறவைத்து, பின்பு நிழலில் உலர்த்தி நடவு செய்யலாம் என்றார். மேலும், இலைவழி தெளிப்பிற்கு 5 மில்லி நானோ டி.ஏ.பி ஒரு லிட்டர் நீரில் கலந்து, பயிரின் முக்கிய வளர்ச்சி நிலைகளான கிளைப்பு மற்றும் துளிர் விடும் தருவாயில் தெளிக்க வேண்டும் என்று அவர் கூறினார். மேலும், நெல் பயிரில் பசி வளர்ச்சியை கட்டுப்படுத்த நானோ உரங்கள் சிறந்த தீர்வாக இருக்கும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

# வல்லுநர் விதை, ஆதார நிலை விதை, சான்று நிலை விதை என்றால் என்ன? தெரியுமா?

தரமான விதையே நல்ல விளைச்சலுக்கு ஆதாரம். அந்த வகையில் நல்ல தரமான திரட்சியான விதைகளை கீழ்க்கண்ட நிலைகளில் உள்ள விதைகளின் நிலைகளில் தேர்வு செய்ய பட வேண்டும்.



**1) வல்லுநர் விதை (BREEDER SEEDS)**

இவ்விதைகள் விஞ்ஞானிகளால், வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் அரசு விதைப்பண்ணைகள் (GOVT SEED FARM) போன்ற இடங்களில் ஆராய்ச்சியாளர்களின் மேற்பார்வையில் உற்பத்தி செய்யப்படும். இவ்விதைகளுக்கு பொன்னிற மஞ்சள் அட்டை வழங்கப்படும்.

**2) ஆதார நிலை விதை (FOUNDATION SEED)**

வல்லுநர் விதைகளை கொண்டு ஆதார நிலை விதைப் பண்ணைகளை (அரசு விதை பண்ணைகள் மற்றும் முன்னோடி விவசாயிகளின் நிலங்களில்) அமைக்கப்பட்டு விதை உற்பத்தி செய்யப்படுகிறது. இவ்விதை பண்ணைகளை விதை சான்றளிப்புத்துறை அலுவலர்கள் பல்வேறு நிலைகளில் வயலாய்வு (FILED INSPECTION) மேற்கொண்டு தகுதியான விதைக்குவியலுக்கு (SEED LOT), சான்றளிப்புச் செய்வார்கள். இந்நிலையில் உற்பத்தி செய்யப்படும் விதைகளுக்கு வெள்ளை நிற (WHITE) சான்றட்டை வழங்கப்படுகிறது.

**3) சான்று நிலை விதை (CERTIFIED SEED)**

ஆதார நிலை விதைகளைக் கொண்டு சான்று நிலை விதைப் பண்ணைகள் (அரசு, தனியார்) நிலங்களில் அமைக்கப் படுகிறது. இவ்விதைகளை பல்வேறு நிலைகளில் ஆய்வு செய்த பின் தகுதியான விதைகளுக்கு சான்றிளிப்பு செய் வார்கள். இந்நிலையில் உற்பத்தி செய்யப்படும் 'நீலநிற சான்றட்டை வழங்கப்படும்.

**எல்லா பயிர்களும் சான்று விதைகளை (CERTIFIED SEED) உற்பத்தி செய்யலாமா?**

விதைகள் சட்டம் (SEED ACT) 1996 பிரிவு 5யின் படி மத்திய அரசால் அறிவிக்கை செய்யப்பட்ட (NOTIFICATION CROP), பயிர் இரகங்களில் மட்டுமே சான்று விதை உற்பத்தி செய்ய இயலும்.

**வயலாய்வு (FILED INSPECTION)**

1) விதைபண்ணைகளில் விதைக்கப்பட்ட விதையின் ஆதாரம் சரியானது தானா? என் விசாரித்து ஆராய்ந்து விதைச்சான்று அலுவலர் (SCO) உறுதி செய்வார்கள்.

2) பதிவு செய்த பரப்பை ஆய்வு செய்ய வேண்டும். வீரிய ஒட்டு ரக மற்றும் தாயாதி விதைகளில் 10% வரையிலும் இதர இனங்களில் 20% வரையிலும் அதிகமாக இருந்தால் விதை ஆதாரம் கோராமலேயே அனுமதிக்கப்படும். கூடுதலான பதிவுக்கட்டணம் செலுத்த வேண்டும்.

3) வயலாய்வின் போது பயிர் விலகு தூரம் உள்ளதா கலவன்கள் குறித்தறிவிக்கப்பட்ட நோய் தாக்கிய பயிர்கள் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு அதிகமாக உள்ளதா என சான்றிளிப்புத்துறை ஆய்வு செய்து வயல் தரம் தேறிய நிலையில் இறுதி வயலாய்வில் மகசூல் கணிப்பை மேற்கொண்டு அறுவடைசெய்ய அனுமதிப்பார்கள்.

4) வயலாய்வின் போது கள அலுவலர் சம்மந்தப்பட்ட விவசாயிகளை அழைத்து செல்ல வேண்டும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# நெல் வயல் தின விழா



தஞ்சாவூர், நவ.7

நெற்களஞ்சியமான தஞ்சாவூர் மாவட்டத்தில் நெல் அதிக அளவு பயிரிடப்படுகிறது. பொதுவாக நெல் பயிரில் அதிக அளவில் பூச்சி நோய் தாக்குதலும் உள்ளது. இதன் காரணமாக விவசாயிகள் அதிக அளவில் இரசாயன பூச்சி கொல்லிகளை உபயோகிப்படுத்துகிறார்கள். இதனை தவிர்க்க மற்றும் குறைக்க மத்திய மற்றும் மாநில அரசு இணைந்து 14 வார உழவர் வயல்வெளிப் பள்ளியை தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், திட்டக்குடி கிராமத்தை தேர்வு செய்து நடத்தி வந்தது. இதில் மண் பரிசோதனை, விதை நேர்த்தி, பூச்சி நோய் மேலாண்மை, வயல் சூழல் ஆய்வு, நன்மை தீமை பூச்சிகள், இயற்கை பூச்சி மற்றும் பூஞ்சண விரட்டிகள், பஞ்சாகாவ்யா, தசகாவ்யா, ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள், பூச்சி ஒழிப்பில் பொறிகளின் பங்கு போன்ற முக்கிய தொழில் நுட்பங்கள் விரிவாக செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. இந்த வயல் வெளிப்பள்ளியின் 14 வாரம் நிறைவடைந்த நிலையில் வயல் தின விழாவானது 4.11.25 அன்று நடத்தப்பட்டது.

இந்த வயல் தின விழாவை மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையம், திருச்சியை சேர்ந்த அமுதா, உதவி பயிர் பாதுகாப்பு அலுவலர், தலைமை ஏற்று நடத்தி வைத்து பயிற்சியில் கற்றுக்கொண்டதை வரும் நாட்களில் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

மேலும் வயல்வெளி பள்ளியின் நோக்கம் நிறைவேற விவசாயிகள் கட்டாயம் முயற்சி செய்ய வேண்டும் என கேட்டுக் கொண்டார். இதில் மொத்தம் 35 விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர். மேலும் இந்த பயிற்சியில் மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையம், திருச்சியை சேர்த்த நிசிந்தா & ராஸ்மி, உதவி பயிர் பாதுகாப்பு அலுவலர் மற்றும் ஜெயகாந்தன், தொழில்நுட்ப அலுவலரும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்கள்.

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

# நெல் பயிரைத் தாக்கும் குலைநோய் தாக்குதலின் அறிகுறிகள் மற்றும் மேலாண்மை

**சாதகமான சூழ்நிலைகள்**

● ஆண்டு முழுவதும் காற்றில் பூஞ்சான வித்துகள் இருப்பது

● மேட்டு நில நெல் சூழல் மற்றும் வெப்ப மண்டலங்களில் அதிக உயரம்

● மேகமூட்டமான வானம், அடிக்கடி மழை மற்றும் தூறல்

● அதிக தழைச்சத்து இடுதல்

● அதிக ஈரப்பதம் (90% மற்றும் அதற்கு மேல்) மற்றும் ஈரமான இலைகள்

**குலைநோய் தாக்குதலின் அறிகுறிகள்**

● இலைகளில் சாம்பல் நிற மையப் பகுதியுடன் காய்ந்த ஓரங்களுடன் கூடிய கண் வடிவ புள்ளிகள் காணப்படும். பல புள்ளிகள் ஒன்று சேர்ந்து பெரிய ஒழுங்கற்ற திட்டுக்களை உருவாக்கும்.

● தீவிர தாக்குதலின் போது, பயிர் முழுவதும் எரிந்தது போன்ற தோற்றமளிக்கும். இதையே "இலை குலை நோய்" என்கிறோம்.

● கணுக்கள் கருப்பு நிறமாக மாறி, உடைந்துவிடும். இதை "கணு குலை நோய்" என்கிறோம்.

● பயிரின் அடிப்பாகத்தில் இடைக்கணுத் தாக்குதலும் ஏற்படுவதால், வெண் கதிர் அறிகுறி தோன்றும். கதிர் வெளிவந்தவுடன் பயிர்கள் சாய்ந்துவிடும்.

● புள்ளிகள் தோன்றி, கருப்பு நிறமாக மாறி, கதிர் மணிகள் சுருங்கியும்/பகுதி நிறைந்தும், கதிர்கள் உடைந்து தொங்கி கொண்டிருக்கும். இதை "கழுத்து குலை நோய்" என்கிறோம்.

● கதிர்ப்பருவத்திற்கு முன்பே கழுத்துப் பகுதியில் நோய் தாக்கினால் தானியங்கள் உருவாகாது.

● ஆனால் கதிர்ப்பருவத்திற்கு பின் தாக்குதல் ஏற்பட்டால், தானியம் உருவானாலும், குறைந்த தரத்துடன் காணப்படும்.

● கதிர் மற்றும் கதிர்க்கிளைகளில் உள்ள புள்ளிகள் பழுப்பு நிறமாக (அ) அடர்பழுப்பு நிறமாக இருக்கும்.

● நெல் இரகங்களைப் பொருத்து, புள்ளிகளின் அளவும், வடிவமும் வேறுபடும்.

**நெல்லில் குலை நோய் கட்டுப்பாடு**

● **விதை நேர்த்தி :** சூடோமோனஸ் (அ) பேசில்லஸ் சப்டிலிஸ் 10 கிராம்/கிலோ விதை (அ) கார்பன்டாசிம் 2 கிராம்/கிலோ விதை

● நாற்றங்கால் 8 சென்ட்க்கு சூடோமோனஸ் 600 கிராம் 20 கிலோ மணலுடன் கலந்து இடவும்

● நடவு வயலில் ஏக்கருக்கு சூடோமோனஸ் 1 கிலோ நட்ட 30ம் நாள் இடவும்


● நோய் அறிகுறிகள் தென்பட்டவுடன் தழைச்சத்து இடுவதை தவிர்க்கவும்

● பச்சை இலை வண்ண அட்டையை உபயோகித்து தழைச் சத்தை இடுவது நோய் தாக்குதலை குறைக்கும்

● ஏக்கருக்கு சூடோமோனஸ் 1 கிலோவை 200 லிட்டர் நேரில் கரைத்து 0.5 சதவிகித கரைசலாக தெளிக்கவும்

கீழ்கண்ட பூஞ்சாணக்கொல்லிகளில் ஏதேனும் ஒன்றை ஏக்கருக்கு தெளிக்கலாம் என சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் தெரிவித்தார்.

கிட்டாசின் (48% EC) 200 மி.லி (அ) டிரைசைச்லோசோல் (75 % WP) 200 கிராம் (அ) அசாக்சிட்ரோபின் 200 (25% SC) மி.லி (அ) மெட்டமினோஸ்ட்ரோபின் (20% SC) 200 மி.லி.



குலை நோய்



கணு குலை நோய்



கழுத்து குலை நோய்



# சேவையூர் பாரம்பரிய பயிர் உற்பத்தியாளர் நிறுவனம் விவசாயிகளுக்கு வங்கி கடன் வழங்க ஏற்பாடு

விருதுநகர், நவ.7

விருதுநகர் மாவட்டம், சேவையூர் பாரம்பரிய பயிர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் சார்பாக பங்குதாரராக உள்ள முன்னோடி விவசாயிகளுக்கு முன்னோடி வங்கி மூலமாக பயிர் கடன் உடனடியாக வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக செயல் அலுவலர் பார்த்த சாரதி கூறினார்.

கடந்த புதன்கிழமையன்று அருப்புக்கோட்டை ஐ.ஒ.பி வங்கியின் பிராந்திய மேலாளர் அமூல் டோமினிக் சேவையூர் வருகை தந்து STCPCL, யின் செயல்பாடுகளை ஆய்வு செய்து, பிசினஸ் பிளான் மற்றும் பயிர்கடன் விவசாயிகளுக்கு வழங்க தயாராக உள்ளதாக தெரிவித்தார். மேலும் கடன் பெறுவதற்கான அனைத்து ஆவணங்களும் விரைவாக சமர்ப்பிக்க கூறினார். இந்த FPO வின் செயல்பாடுகள் மற்றும் திட்டபணிகள் தனக்கு திருப்திகரமாக உள்ளதாக தெரிவித்தார். உரிய ஆவணங்களுடன் முறைபடி விண்ணப்பிக்குமாறு கூறினார். முதற்கட்டமாக 250 விவசாயிகளுக்கு பயிர் கடன் ஒரு வருட தவணையில் வழங்க பட உள்ளதாக தெரிவித்தார்.

வேளாண் ஆலோசகர் சந்திர சேகரன் தனது கள ஆய்வில், நெல் நாற்று நட்ட 15-20வது நாட்களில் நுனி இலைகள் கருகி மஞ்சளாக மாறி வருவதை எடுத்துக்கூறி அதற்கான தடுப்பு முறைகளை விவரித்தார். எந்த ஒரு பயிருக்கும் தழை மணி சாம்பல் சத்து முக்கியமானது அதை போல 10 வகையான நுண்ணூட்ட சத்துகள் மிகவும் தேவை. நுண்ணூட்ட சத்து பற்றாக்குறை உள்ள காரணத்தால் இலைகள் கருகி மஞ்சளாக மாறுகின்றன. இதற்கு அடியுரமாக நுண்ணூட்ட சத்துகள் (MN MIXTURE) ஏக்கருக்கு 5 கிலோ இடவேண்டும். இல்லாத பட்சத்தில் அரை கிலோ சிங்க் சல்பேட் +1 கிலோ யூரியாவுடன் கலந்து இலைவழியாக தெளிக்கலாம். அக்ரி கிளினிக்-யில் யூரியா, டிஏபி, பொட்டாஷ் போன்ற உரங்கள் இருப்பில் உள்ளதாக தெரிவித்தார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

இந்த FPOயின் செயல்பாடுகள் சிறப்பாக நடைபெற உதவியாக இருக்கும் சிசிடி செயல் இயக்குநர் பத்மாவதி மற்றும் திட்ட இயக்குநர் ஜான் பிரிட்டோ உள்ளதாக தெரிவித்தார். பின் நீரில் கரையக்கூடிய 19:19:19 உரத்தை நீரில் கலந்து தெளித்தால் பயிர் நன்றாக வளருவதுடன் அதிகமாக தூர் கட்டுமென கூறினார்.

வங்கி அலுவலருடன் நடத்த ஆய்வில் பணக்குடி அனிமேட்டர் வெற்றி செல்வி, அய்யப்ப பாண்டி கிருஷ்ண குமாரி மாரீஸ்வரி உள்பட கலந்து கொண்டனர்.



# தேனீ வளர்ப்பில் ராணி தேனீ பற்றிய தகவல்!



வேளாண் உற்பத்தித் திறனை அதிகரிக்க உதவும் பல்வேறு வழி முறைகளில் மகரந்தச் சேர்க்கை நடைபெறச் செய்தல் மிக முக்கியமான வழிமுறையாகும். தோட்டங்களில் தேனீ வளர்ப்பதன் மூலம் மகரந்தச் சேர்க்கையை ஊக்குவித்து விளைச்சல் அதிகரிக்க வாய்ப்புள்ளது. மேலும் தேன் உற்பத்தி மூலம் வருமானம் உயர்கிறது. தேன் மெழுகு பல்வேறு தொழிற்சாலைகளுக்கும் பயன்படுகிறது.

ஒவ்வொரு தேனீக் குடும்பத்திலும் ஒரு இராணித் தேனீ, சில நூறு ஆண் தேனீக்கள் மற்றும் ஆயிரக்கணக்கான பணித் தேனீக்கள் வாழ்கின்றன.

1) ராணித் தேனீ ஒரு பூரண வளர்ச்சியுற்ற பெண் தேனீ. இதனால் மட்டுமே ஆண் தேனீக்களுடன் புணர்ந்து இனவிருத்தி செய்ய இயலும்.

2) ராணிதேனீ பணித் தேனீயை விட உருவில் பெரியது, பறக்காத நேரங்களில் இறக்கைகள் வயிற்றின் மேல் மடித்து வைக்கப்படும் பொழுது, வயிற்றுப் பகுதியை இறக்கைகள் முற்றிலுமாக மூடுவது இல்லை.

3) மகரந்தம் சேகரிக்கும் அமைப்புகள் கால்களில் இல்லாததால் ராணித் தேனீயால் உணவு சேகரிக்க இயலாது. அதே போல் மெழுகுச் சுரப்பிகள் இல்லாததால் ராணித் தேனீயால் கூடு கட்டவும் இயலாது.

**ராணி தேனீ வளரும் விதம்**

வயது முதிர்ந்ததால் ராணித் தேனீ கருவுற்று முட்டையிட இயலாத பொழுதும், கூட்டம் பிரியும் காலங்களிலும், அடையின் கீழ் விளிம்பில் அல்லது பக்கவாட்டில் கட்டப்படும் ஒழுங்கற்ற நிலக்கடலை போன்ற ராணித் தேனீ அறைகளில் புதிய ராணித் தேனீக்கள் வளர்க்கப்படுகின்றன.

சில நேரங்களில் ராணித் தேனீ இறக்க நேரிட்டாலோ அல்லது கூட்டிலிருந்து தவறும் பொழுதோ அடைப் பரப்பின் நடுவில் உள்ள பணித் தேனீ அறைகள் அவசர கால ராணித்தேனீ அறைகளாக மாற்றப்பட்டும் புதிய ராணித் தேனீக்கள் உருவாக்கப்படுகின்றன. கருவுற்ற முட்டையிலிருந்து மூன்று நாட்களில் புழுக்கள் பொரிந்து வெளிவருகின்றன. புழுவிற்க்கு தொடர்ந்து ஐந்து நாட்களுக்கு வேலைக்காரத் தேனீக்களால் தேனீப்பால் போதிய அளவு எவ்விதத் தட்டுப்பாடும் இல்லாமல் வழங்கப்படுகின்றது. முழுவதும் வளர்ச்சியுற்ற புழுக்கள் கூட்டுப் புழுவாக பின்னர் வளர்ப்பு அறைகள் மெழுகு மூடியால் மூடப்படுகின்றன. கூட்டுப் புழு எட்டு நாட்களில் ராணித் தேனீயாக உருமாற்றம் அடைந்து மெழுகு அறையை விட்டு வெளி வருகின்றது.

ராணித் தேனீ வெளிவந்தவுடன் முதலில் பிற வளரும் ராணித் தேனீக்களைக் கொடுக்கால் கொட்டிக் கொல்கின்றது. வெளிவந்த ஐந்து முதல் பத்து நாட்களில் புணர்ச்சிப் கூட்டிற்கு வெளியே வான் வெளியில் நடக்கின்றது. புணர்ச்சியின் பொழுது விந்துப்பை வாழ்நாள் முழுவதும் கருவுற்ற முட்டையிடத் தேவை யான அளவு விந்துக்களால் நிரப்பப்படுகின்றது. புணர்ந்த நான்கு நாட்களுக்குப் பின் ராணித் தேனீ முட்டையிடத் தொடங்கும். ஆண் தேனீக்களை உருவாக்கக் கருவுற்ற முட்டைகளையும் இடும் ராணித் தேனீயின் வாழ்க்கைக் காலம் இரண்டு முதல் மூன்று ஆண்டுகள்ஆகும். இளம் ராணித் தேனீயின் மார்பின் மேற்பகுதியல் அதிக எண்ணிக்கையில் ரோமங்கள் இருக்கும். வயதான ராணித் தேனீயின் உடல் ரோமங்கள் மிகுதியாகக் கொட்டி விடும். ராணித் தேனீயின் வளர்ச்சிப் பருவங்கள் முட்டை 3 நாட்கள், புழு 5 நாட்கள், கூட்டுப்புழு 7-8 நாட்கள் என மொத்த வளர்ச்சிக் காலம் 15-16 நாட்கள் வரை உள்ளது. ஆயுட் காலம் 2-3 ஆண்டுகள், சிறப்பான பணிகாலம் 1.5 ஆண்டுகளாகும்.

**ராணி தேனீ பணிகள்**

ராணித் தேனீயானது தேனீக் கூட்டத்தின் அன்னையாகும். ஒரு முட்டையிடும் இயந்திரம் போல அயராது முட்டைகள் இட்டு ராணித் தேனீக்களையும் பணித் தேனீக்களையும், ஆண் தேனீக்களையும் ஈன்று தருகிறது. ராணித் தேனீயால் முட்டையிலிருந்து வரும் புழுக் களுக்கு உணவு தரவோ அவற்றைப் பேணி வளர்க்கவோ இயலாது. ராணித்தேனீ புதிதாகக் கட்டப்பட்ட அடை அறைகளில் விரும்பி முட்டையிடும் கருத்த அடை அறைகளில் ராணித் தேனீ முட்டையிடு வதில்லை. துப்புரவு செய்யப்பட்ட புழு வளர்ப்பு அறைகளின் அடியில் ராணித் தேனீ தனித்து முட்டைகளை இடுகின்றது. நன்கு பணியாற்றும் ஒரு ராணித் தேனீ அனைத்து அடை அறைகளிலும்

இடைவெளி இல்லாமல் சீராக நாளொன்றுக்கு சராசரியாக 500 முதல் 2000 முட்டைகள் வரை இடும். முட்டையிடப் போதிய அறை வசதியில்லாத பொழுது சில நேரங்களில் மட்டும் ஒன்றுக்கு மேற்பட்ட முட்டைகளை ஓர் அறையில் இடும் உடல் ஊனமுற்ற ராணித் தேனீ யால் சரிவர முட்டையிட இயலாது. புணர்ச்சியில் தோல்வியுற்ற மற்றும் வயது முதிர்ந்த ராணித் தேனீக்கள் கருவுறாத முட்டைகளை மட்டுமே இடும். அத்தகைய முட்டை களிலிருந்து ஆண் தேனீக்கள் மட்டுமே உருவாகும்.

கட்டுரையாளர் : **முனைவர் வீ.சாதனா, உதவி பேராசிரியர் (பூச்சியியல் துறை), புஷ்கரம் வேளாண்மை அறிவியல் கல்லூரி, புதுக்கோட்டை. மின்னஞ்சல் : sadhanaveeramani@ gmail.com.**



# பூச்சி மேலாண்மைக்கான பாரம்பரிய தொழில்நுட்ப அறிவு

பாரம்பரியமான தொழில்நுட்ப அறிவு என்பது, முன்னோர்கள் மற்றும் உள்ளூர் சமூகங்கள் தங்கள் வாழ்வியல், அனுபவங்கள், கலாச்சாரம், மற்றும் இயற்கை சூழலுடன் கொண்ட நீண்டகால தொடர்புகளின் மூலம் உருவாக்கிய அறிவு, நடைமுறைகள், நம்பிக்கைகள் ஆகியவற்றின் ஒரு வளமான தொகுப்பு ஆகும். இந்த அறிவு மனிதன் மற்றும் நிலம் இடையிலான ஆன்மிக, பண்பாட்டு அடிப்படைகளைக் கொண்டுள்ளது.

### பாரம்பரிய அறிவு உருவான அடிப்படை காரணங்கள்

1. முயற்சி மற்றும் பிழை திருத்தம்
2. விவசாயிகளின் அனுபவம்
3. சூழலுக்கு ஏற்ற முறைகளைத் தேர்வு செய்தல்
4. பல தலைமுறைகளாக அதே பருவ நிலை அமைப்பில் வாழ்வு

### பாரம்பரிய அறிவின் ஆதாரங்கள்

- விவசாயிகள்
- சமூக தலைவர்கள்
- பழமொழிகள்
- பாரம்பரியப் பதிவுகள்
- நாட்டுப்புற கலை
- பாடல்கள், செய்யுள்
- மூத்தோர் அறிவு
- பழமையான நூல்கள்

### பாரம்பரிய பூச்சி மேலாண்மையின் மூலக்கருத்துக்கள்

1. வரும் முன் காப்பது
2. ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை கொள்கை
3. பல்வகை விவசாய முறைகள்
4. அதிக தாவர, விலங்கு பல்வகைதன்மையை நிலைப்படுத்தல்
5. பூச்சி எதிரி உயிரிகளைப் பாதுகாத்தல்
6. பூச்சிக்கு ஏற்றாத வாழ்விடத்தை உருவாக்குதல்

### பூச்சி மேலாண்மைக்கான பாரம்பரிய முறைகள்

#### வேம்பு

✓ முக்கிய பூச்சி நாசினி

✓ உழுதல் செய்யும் போது வேம்புக் கட்டைகளை பயன்படுத்தி பூச்சி புழுக்கள், களைகொடிகள் அழித்தல்

✓ வேம்பெண்ணெய் சுருள் பூச்சிகள் மீது விளைவுடையது

✓ வேம்பு இலைச் சாறு வயல்வெளிப் பூச்சிகளை கட்டுப்படுத்த பயன்படும்

✓ களஞ்சியத்தில் சேமிப்புப் பூச்சிகளைத் தடுக்கும்

**கோமியம்**

✓ தாவரச் சாறுகள் தயாரிக்க அடிப்படைப் பொருள்
✓ தசகாவ்யம், பஞ்சகாவ்யம் தயாரிக்க பயன்பட்டு பூச்சி விரட்டியாக செயல்படுதல்

**நொச்சி**

✓ இலைச் சாறு சிறந்த பூச்சி விரட்டியாகும்
✓ சேமிப்பு மற்றும் சாறு உறிஞ்சிப் பூச்சிகளைக் கட்டுப்படுத்தும்

**சாம்பல்**

✓ இலை மேற்பரப்பில் பூச்சி உண்பதற்கு இடையூறு விளைவிக்கும்
✓இலைப்பேன், அசுவினி போன்ற சாறு உறிஞ்சிப் பூச்சிகளை கட்டுப்படுத்தும்

**மண்ணெண்ணெய்**

✓சணல் கயிற்றில் தடவி பயன்படுத்துதல் நீரில் இருப்புப் பூச்சி புழுக்களை அழிக்க பயன்படும்

**பறவை அமர்வுக்கம்பிகள்**

✓ மரக்கட்டைகளால் அமைத்து பறவைகளை ஈர்த்து பூச்சிகளை தின்ன செய்யும்

**ஆமணம் பிண்ணாக்கு**

✓ வெல்லத்துடன் கலக்கி மண் பானையில் புதைத்து, வாசனை மூலம் பூச்சியை ஈர்த்து அழிக்கும்
✓ தேங்காய் கர்ப்பநாசி பூச்சி கட்டுப்படுத்தும்

**புகையிலை**

✓ இலைச் சாறு பூச்சிகளைத் துரத்தும்
✓துளைப்பான் பூச்சிகளை கட்டுப்படுத்தும்

**எரிதீப ஒளி முறைகள்**

✓ மாலை நேரத்தில் தீ வைத்தல் மூலம் இரவுநேர பூச்சிகளை ஈர்த்து கட்டுப்படுத்தல்

**வேலிப் பயிர்கள்**

✓ வயல் எல்லைகளில், ஒரே குடும்ப தாவரங்களை நடவு செய்வது மூலம் பூச்சி பரவலைக் கட்டுப்படுத்தும்

**பாரம்பரிய உயிரியல் பூச்சிக்கொல்லிகள் தயாரிப்பு முறைகள்**

**நீமாஸ்திரம்**

✓சாறு உறிஞ்சிப் பூச்சிகள், மாவுப் பூச்சிகள் கட்டுப்பாட்டிற்கு

- 100 லிட்டர் தண்ணீர்
- 5 லிட்டர் கோமியம்
- 5 கிலோ மாட்டு சாணம்
- 5 கிலோ வேம்பு இலைத்துண்டுகள்
- 24 மணி நேரம் புளிக்க வைத்து வடிகட்டி தெளித்தல்

**அக்னியஸ்திரம்**

✓ இலைச் சுருள், துளைப்பான், புகையான் மீது

- 100 லிட்டர் தண்ணீர்
- 10 லிட்டர் கோமியம்
- 1 கிலோ புகையிலை
- 500 கிராம் பச்சை மிளகு
- 500 கிராம் பூண்டு
- 5 முறை கொதிக்க வைத்து 24 மணி நேரம் புளிக்க வைத்து வடிகட்டி தெளித்தல்

**பிரம்மாஸ்திரம்**

✓சாறு உறிஞ்சிப் பூச்சிகள் மற்றும் துளைப்பான் மீது

- 10 லிட்டர் கோமியம்
- 3 கிலோ வேம்பு இலைத்துண்டுகள்
- 5 முறை கொதிக்க வைத்து புளிக்க வைத்து வடிகட்டி தெளித்தல்

**பூச்சியின் இயல்பினை அடிப்படையாகக் கொண்ட பயன்பாடு**

- நீமாஸ்திரம் — தாவரத்தை உணவாக பயன்படுத்தும் பூச்சிகள்
- பிரம்மாஸ்திரம் — தாவரத்தை இனப்பெருக்க தளமாக பயன் படுத்தும் பூச்சிகள்
- அக்னியஸ்திரம் — தாவரத்தை தங்கும் இடமாக பயன்படுத்தும் பூச்சிகள்

**பாரம்பரிய பூச்சி எதிர்ப்பு நெல் வகைகள்**

- பெருங்கர்
- அரியான்
- மரநெல்
- காளியன் சம்பா
- குதிரைவால் சம்பா
- நொருங்கன்
- கள்ளிமடையான்
- கலர்பாலை
- வாடன் சம்பா



### பூச்சியல்லா ஒல்லிகளின் மேலாண்மை

**பறவைகள்**

- சத்தம் எழுப்பும் கருவிகள், மனித உருவங்கள் பயன்பாடு

**எலி**

- உலர்ந்த மீன் மற்றும் சிமெண்ட் கலவை
- பாரம்பரிய வலைகள்
- உலர்ந்த மிளகாய் புகை
- இறந்த எலிகள், தவளைகளை வைப்பது மூலம் பயமுறுத்தல்

**காட்டுப் பன்றி**

- சத்தம் எழுப்பும் கருவிகள்
- துணிகள், சத்தம் ஒலிக்கும் பட்டைகள் உடன் வேலிகள்

### களஞ்சிய பூச்சி மேலாண்மை

**தாவரப் பொருட்கள்**

- வேம்பு, நொச்சி, பூண்டு, கறிவேப்பிலை, புங்கம்
- சிவப்பு மிளகாய்

**பாரம்பரிய சேமிப்பு கட்டமைப்புகள்**

- தோம்பை
- மண் கட்டை
- குளுக்கை
- அடுக்கு பானை
- தள்ளப்பை
- பாதாயம்

இந்த கட்டமைப்புகளில் தானியங்களை சேமிப்பதன் மூலம் சேமிப்பு பூச்சிகளைக் கட்டுப்படுத்தலாம்.





கட்டுரையாளர்கள் : **வெ.சந்தோஷ், உதவி பேராசிரியர், உழவியல் துறை, மின்னஞ்சல் :** santhoshvmsh2000@gmail.com **மற்றும் முனைவர் க.கண்ணன், இணை பேராசிரியர் மற்றும் துறை தலைவர், விதை அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல், நாளந்தா வேளாண்மை கல்லூரி, திருச்சி, தமிழ்நாடு. மின்னஞ்சல் :** kannanseedtechnologist@gmail.com

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID BHEL

Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741